எம்.சி.ஓ.பி எண்: 8209 /2018 தேதி: 09.03.2026

மசா. : 3

பெயர் : சாமிநாதன்

த/பெ. : செல்வராஜ்

வயது : 48

**சத்திய பிரமாணம் செய்விக்கப்படுகிறார்**

**முதல் விசராணை**

நான் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அதனை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். மேலும் என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் மசாஆ 11 மட்டும் தாக்கல் செய்கிறேன்.

**2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் தற்பொழுது ரியல்எஸ்டேட்லில் வேலை செய்கிறேன். விபத்து சமயத்தில் விபத்து நடக்கும்போது நான் எனது நண்பருக்காக காத்திருந்தேன். குற்றவியல் நீதிமன்றத்தில் இந்த விபத்து சம்பந்தமாக சாட்சி அளிக்கவில்லை. இறந்தவரின் மகன் சண்முகம் என்பவர் கேட்டுக்கொண்டதன் பெயரில் சாட்சி அளிக்கவந்துள்ளேன். இறந்த கலைமணி எந்த மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார் என்றால் அப்போது எனக்கு தெரியாது. பின்னாலில் அவர் ராஜுவ் காந்தி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாக கேள்விபட்டேன். அவருக்கு என்ன சிகிச்சை அளிக்கப்பட்ட விவரம் எனக்கு தெரியாது. அவர் இறந்துவிட்டார் என்பது எனக்கு 2025 ல் தெரியவந்தது. நான் மனுதாரரருக்கு ஆதரவாக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

X

**மறுவிசாரணை இல்லை**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியின் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சாி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவாிடம் கையொப்பம் பெறப்பட்டது.